<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 107/2019**

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்</u>

<u>வாக்குமூலம் – வா.சா–1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரஸ்வதி | மதம் | : | |
| த/க/பெ. | : | வெங்கிடுசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | கரடிவாவி | வயது | : | 60 |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2026 ஆண்டு ஜூன் மாதம் 10ம் நாள் சாட்சியம்.

---

சாட்சி மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சிக்காக சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

1. 29.04.2003 தேதியிட்ட உடன்படிக்கை வரைபடத்துடன் அசல்.
2. 25.03.2019 தேதியிட்ட வீட்டு வரி ரசீதின் அசல்.
3. 25.03.2019 தேதியிட்ட குடிநீர் கட்டண ரசீதின் அசல்.
4. 30.12.2017 தேதியிட்ட மின் கட்டண ரசீதின் அசல்.

வாதி தரப்பு கூடுதல் ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். 29.04.2003 தேதியிட்ட உடன்படிக்கை ஆவணத்தில் உள்ள கையொப்பமானது பிரதிவாதிகளுடையது அல்ல என்றும், ஆவணத்தின் உள்ளடக்கத்திலிருந்து அது என்ன வகையான ஆவணம் என்று அறிய முடியவில்லை என்றும், எனவே மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. மேற்படி ஆவணம் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகின்றது, மேற்படி ஆவணங்கள் முறையே **வா.சா.ஆ.3** முதல் **வா.சா.ஆ.6** ஆவணங்கள் ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

KALIDASAN VEERASAMY

Digitally signed by KALIDASAN VEERASAMY
Date: 2026.06.10 18:38:49 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.